**DEPOSITION OF WITNESSES**

**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE E.C. COURT, PUDUKKOTTAI**

**SC. No:33/2013**

**Deposition of Witnesses for PW 13**

| | | |
|---|---|---|
| Name | : | திரு பாலாஜி |
| Father's Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Section 142 of Bharatiya Sakshya Adhiniyam, 2023, on the day of 18.09.2025

**எதிரிகள் ஆஜர்.** இருதரப்பு வழக்கறிஞர்களும் ஆஜர்.

முதல் விசாரணை

நான் தற்போது அரியலூர் மாவட்டம் ஜெயங்கொண்டம் காவல் நிலையத்தில் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன்.கடந்த 13.09.2011 ம் தேதி காலை சுமார் 5.30 மணியளவில் அறந்தாங்கி காவல் ஆய்வாளராக பணியில் இருந்தபோது அறந்தாங்கி காவல் நிலைய குற்ற எண் 554/2011 u/s 294 (b),323,307, இ.த.ச வழக்கின் முதல் தகவல் அறிக்கை நகலைப்பெற்று விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன் . காலை 6.00 மணிக்கு சம்பவம் இடம் சென்று சம்பவ இடத்தை சாட்சிகள் இராமசாமி , அழகர் சாமி ஆகியோர் முன்னிலையில் பார்வையிட்டு மாதிரிவரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன்.பின்னர் சாட்சிகள் சண்முக நாதன் , சரவணன், கிருஷ்ணன், இராமசாமி, அழகர் சாமி, ஆகியோர் விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன் பின்னர் 10.00 மணிக்கு இவ்வழக்கில் சம்மந்தப்பட்ட எதிரி மனோகரன் என்பவரை அறந்தாங்கி to கட்டுமாவடி ரோடு இரயில்வே கேட் அருகே காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் எதிரி மனோகரன் எந்தவித அச்சுறுத்தல் இன்றி தானாக கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் அடைக்கலம் நாகய்யா ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் எதிரி தன்னை அழைத்து சென்றால் வழக்கில் பயன்படுத்திய ரீப்பரை எடுத்து ஆஜர் செய்வதாக கூறினார். பின்னர் எதிரி மற்றும் சாட்சி சகிதம் போலீஸ் ஜீப்பில் புறப்பட்டு அறந்தாங்கி இரயில்வே கேட் தென்புறம் உள்ள புதரில் எதிரி எடுத்து ஆஜர் செய்த சுமார் 75cm நீளமுள்ள சுமார் 4.5cm அகலம் கொண்ட இரத்தக் கரை படிந்த ரீப்பர் கட்டையை மகஜரில் கைப்பற்றினேன்.பின்னர் எதிரி மற்றும் தடயம் சகிதம் காவல் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். தடய சொத்தை படிவம் 95ன் மூலம் நீதிமன்றத்தில் ஒப்புவித்தேன். பின்னர் 04.11.20211ம் தேதி சாட்சி கண்ணன்

என்பவரை விசாரித்து அவரது வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் 20.11.2011 ம் தேதி சாட்சி கண்ணனுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு சையத் என்பவரை விசாரணை செய்து அவரின் வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றைய தினமே உதவி ஆய்வாளர் ஜவஹர் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.பின்னர் இவ்வழக்கின் விசாரணை முடித்து எதிரிகள் மீது பிரிவுகள் u/s 294 (b),323,307, இ.த.ச.லிருந்து 294(b).323,326,307 இ.த.ச–ன்படி 20.11.2011 –ன்படி சட்டப்பிரிவு மாற்றம் செய்தேன். எதிரிகள் மீது 294(b).323,326,307 இ.த.ச–ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். அதற்கான சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ 5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் காயம் அடைந்த கண்ணன் என்பவர் கடந்த 03.02.2012 ம் தேதி இறந்துவிட்டார் அவர் இறப்பு தொடர்பாக அறந்தாங்கி காவல் நிலைய குற்ற எண் 40/2012 சட்டப் பிரிவு 174 கு.வி.மு.ச படி வழக்கு பதிவு செய்தேன்.அதற்கான சந்திரசேகர் கொடுத்த புகார் மனு **அ.த.சா.ஆ 6** ஆக குறியீடு செய்யப்படுகிறது.அதன்அடிப்படையில் நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை **அ.த.சா.ஆ 7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 04.02.2012ம் தேதி காலை 10.00 மணிக்கு அறந்தாங்கி அரசு மருத்துவமனைக்கு இறந்த கண்ணனின் பிரேதத்தின் மீதான பிரேத விசாரணை அறிக்கையை பஞ்சாயத்தின் முன்னிலையில் சாட்சிகள் விசாரணை செய்து தயார் செய்தேன்.பின்னர் பிரோ பரிசோதனைக்காக வேண்டுகோள் கடிதம் கொடுத்து தலைமை காவலர் 834 என்பவர் மூலம் அனுப்பி வைத்தேன்.பின்னர் சாட்சிகள் பரமசிவம், சந்திரசேகரன், ஆனந்த ராஜ், சுந்தரேசன் ஆகியோர்களை விசாரித்து அவர்களின் வாக்குமூலம் பதிவுசெய்தேன்.பின்னர் 01.03.2012 ம் தேதி மருத்துவர் திரு சுப்புசுவராஜ் என்பவரை விசாரித்தும் இறந்த கண்ணனின் பிரேத பரிசோதனை அறிக்கை பெற்றும் அவரின் வாக்குமூலத்தை பதிவு செய்தேன், அன்றைய தினமே தடய அறிவியல் ஆய்வக அதிகாரி திரு நவாப் ஜான் என்பவரை விசாரித்தும் இறந்தவரின் உடல் உள்உறுப்புகள் குறித்த விசரா அறிக்கையை பெற்றேன் .பின்னர் 15.03.2012ம் தேதி சாட்சிகளை விசாரணையை முடித்தும் வழக்கு சம்பவம் உண்மையென புலன் விசாரணையில் துலங்கியதால் எதிரிகள் மீது 294(b),323,307ன் லிருந்து 294(b),323,302ன் படி சட்டப்பிரிவு மாறுதல் செய்தும் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் அந்த சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை **அ.த.சா.ஆ 8** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இ.த.ச.பிரிவுகள் 294(b),323,302ன் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன்.எதிரி மனேகரன் கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் என்னை கூட்டி போனால் நான் பயன்படுத்திய ரீப்பர் கட்டையை ஆஜர் செய்கிறேன் என்று சொல்லியுள்ள ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ 9** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பார்வை மகஜர் **அ.த.சா.ஆ 10** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வரைபடம் **அ.த.சா.ஆ 11** ஆக குறியீடு செய்யப்படுகிறது. கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ 12** ஆக குறியீடு செய்யப்படுகிறது. பிரேத விசாரணை அறிக்கை **அ.த.சா.ஆ 13** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இறந்த கண்ணனின் விபத்து பதிவேடு **அ.த.சா.ஆ 14** ஆக குறியீடு செய்யப்படுகிறது. திருச்சி வட்டார தடய அறிவியல் ஆய்வகம் வழங்கிய

விசரா அறிக்கையை **அ.த.சா.ஆ 15** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இவ்வழக்கில் எனது விசாரணையில் அ.சா.1 ,5,6,7,10ஆகிய சாட்சிகள் வழக்கு சம்பவம் குறித்து குறிப்பிட்டு வாக்குமூலமாக சொல்லியுள்ளார்கள்.

**எதிரிகள் தரப்பிலான குறுக்கு விசாரணை**

இல்லை என தெரிவிக்கப்பட்டது.

Taken down by me in open court
read over to the witness and
admitted by her to be correct.

Addl. District Judge/ Presiding Officer,
Spl. Court for EC/NDPS Act case,
Pudukkottai.